**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 350/2023**
திரு. சிவக்குமார் (P.W.–1) **06.02.2026.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். முதல் விசாரணை வாக்குமூல விலாசத்தில்தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரி. என்னுடைய மாமனார் ஊர் திருப்பூர் என்றால் சரி. மாமனார் பெயர் என்ன என்றால் சந்திரசேகர். மாமியார் பெயர் வசந்தி. பிரதிவாதிக்கு எதிராக என்னுடைய மாமியார் திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாவாச்சொத்திற்கு அருகில் உள்ள சொத்தை பொறுத்து அசல் வழக்கு எண். 351/2023 ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 என்ன தேதியில் ஏற்பட்டது என்றால் மார்ச் மாதம் 2019 ல் ஏற்படுத்திக்கொண்டேன். என்ன பதிவு அலுவலகத்தில் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டது என்றால் தொட்டிபாளையம் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தேன். அதே தேதியில் தான் பிரதிவாதி என் மாமியாருக்கும் கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளார் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு யார் இடை தரகர் என்றால் வெள்ளியங்கிரி. இடைதரகருக்கு கமிஷன் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பிரதிவாதிக்கு வெள்ளியங்கிரியை எப்படி தெரியும் என்றால் அவருடைய நண்பர் திருப்பூரில் உள்ளார். என்னுடைய மாமியாருக்கு குடும்பநாயக்கன் பாளையத்தில் செல்வராணி என்ற உறவினர் உள்ளாரா என்றால் சரி. வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. பிரதிவாதி பிறகு பார்த்து சொல்வதாக சொன்னார். தாவாச்சொத்தை பொறுத்து வா.சா.ஆ.1

ஏற்படுவதற்கு முன்பு பிரதிவாதி செல்வராணிக்கு ஒரு கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அந்த கிரைய ஒப்பந்த ஆவணம் காலாவதியாகிவிட்ட பிறகு வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி கொண்டீர்கள் என்றால் எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் தகப்பனார் செல்வராணியிடம் ரூ. 4,00,000/— கடன் பெற்றுக்கொண்டு பாதுகாப்பிற்காக அவர் பெயரில் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. அந்த ஒப்பந்தத்தின் காலவரையறைக்குள் கடன் தொகையை பிரதிவாதி செலுத்த முடியாததால் செல்வராணி சொன்னதின் பேரில் வா.சா.ஆ.1 என் பெயரில் எந்த ஒரு முன் தொகையும் பெறாமல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் படி முன்தொகை ரூ. 4,49,000/—ஆகும். முன்தொகை வங்கி பரிமாற்றம் ஏற்படவில்லை என்றால் நேரடியாக கொடுத்தேன். முன்தொகை இருந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. தொழிலுக்காக வைத்திருந்த தொகையைத்தான் கொடுத்தேன்.

வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பிரதிவாதியிடம் எந்த முன் தொகையும் நான் கொடுக்கவில்லை என்றால் தவறு. செல்வராணி கேட்டுக்கொண்டதற்கிணங்க முன் தொகை எதுவும் பெறாமல் பிரதிவாதி என் பெயரில் வா.சா.ஆ.1 ஐ ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றார் தவறு. தொகை பெற்றுக்கொண்டதாகத்தான் சொல்லித்தான் வா.சா.ஆ.1ல் கையொப்பம் செய்து பிரதிவாதி பதிவு செய்து கொடுத்தார். வா.சா.ஆ.1ன் கிரைய காலம் என்ன என்றால் 11 மாதங்கள். எதற்காக 11 மாதங்கள் முடிவு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதி தான் கேட்டார். முதல் விசாரணை வாக்குமூலத்தில் வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்ய வேண்டியுள்ளது என்று 11 மாதங்கள் கிரைய காலம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அளவு கற்கள் நட வேண்டும் என்றும் சொன்னார். வருவாய் ஆவணங்களை பிரதிவாதி சரி செய்து விட்டார் என்று முதல் விசாரணை சொல்லியுள்ளேன் என்றால் சரி. ஆனால் கிரையத்திற்கு அவர் வரவில்லை.

தாவாச்சொத்தை பொறுத்து பிரதிவாதி என்ன மாற்றங்கள் வருவாய் ஆவணங்களில் செய்தார் என்றால் எதையும் மாற்றவில்லை. அதனால் வருவாய் ஆவணங்களில் மாற்றங்கள் செய்வதற்காக 11 மாதங்கள் என்று சொல்வதே பொய். வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதியை வா.சா.ஆ.1 ஏற்பட்ட போது பார்த்தேன் அதன் பிறகு தற்போது நீதிமன்றத்தில்தான் பார்க்கிறேன் என்றால் தவறு. 11 மாதங்கள் கிரைய காலத்தில் அவர் வீட்டிற்கு சென்று பார்க்கவில்லை என்றால் தவறு. பிரதிவாதியின் அலைபேசி எண் தெரியாது என்றால் தெரியும். அலைபேசி எண் என்ன என்றால் தெரியாது. முதலில் ஒரு எண் வைத்திருந்தார் தற்போது எண் மாற்றிவிட்டார். எந்த தேதியில் இடைத்தரகருடன் சொத்தை போய் பார்த்தேன் என்றால் 20.05.2019 ஆம் தேதி போய் பார்த்தேன். அதன் பிறகு இரண்டு மாதங்கள் கழித்து போய் பார்த்தேன். இந்த விவரங்களை முதல் விசாரணையிலும், தாவாவிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்குச் சொத்தின் மதிப்பு எதன் அடிப்படையில் அதிகமாகிவிட்டதாக சொல்கிறீர்கள் என்றால் நான் அப்படி சொல்லவில்லை.

எனக்கு என்ன தொழில் என்றால் மட்டை நார் தொழில். பொள்ளாச்சியில் நிரந்தரமாக வசித்து வருவதால் திருப்பூரில் வீடு கட்டுவதற்காக இடம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு. தாவாச்சொத்து அருகே நிறைய வீடுகள் கட்டடப்பட்டுள்ளது என்றால் சரி. அது யாருடையது என்றால் தெரியாது. தாவாச்சொத்திற்கு அருகில் சொத்துக்களை கிரையம் பெற்று பிரதிவாதியும், அவருடைய தகப்பனாரும் விற்பனை செய்வதால் அதற்கு கடன் பெற்றுள்ளார்கள் என்றால் தெரியாது. பிரதிவாதிக்கும் எனக்கும் எந்த பண பேச்சுவார்த்தையும் இல்லை என்றாலும், பிரதிவாதியின் தகப்பனாருக்கும்

செல்வராணிக்கும் தான் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றாலும் பொய். செல்வராணி கேட்டுக்கொண்டதற்கிணங்க பெயரளவில் அவர் சொன்னதின் பேரில் வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. கரைபடிந்த கரங்களுடன் தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

**ஓம்/– கே. ஆர். கண்ணன்.,**
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.